சுதந்திர தின விழா போட்டிகளில் வெற்றி பெற்ற

# பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசு

## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வழங்கியது

சென்னை, ஆக.17-

சுதந்திர தினத்தையொட்டி சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், இந்திய தொழில்துறை கூட்டமைப்புடன் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளை நடத்தியது. 'இந்தியா- 75 இளைஞர் மாநாடு' என்ற தலைப்பில் ஓவியம், சுவரொட்டி உருவாக்குதல், வாசகம் எழுதுதல், கட்டுரை மற்றும் கல்வி தொழில்நுட்பத்துக்கான எதிர்கால தீர்வுகள் குறித்த எழுத்துப்போட்டிகள் இணைய வழியில் நடந்தது.

இதில் 5 ஆயிரத்து 500 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இந்த போட்டியில் வெற்றி பெற்ற 57 மாணவ-மாணவிகளுக்கு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் பிரதீப் யாதவ் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் இயக்குனர்கள் சுஜாதா ஜெயராஜ், ராஜேஷ் சதுர்வேதி, டி.அர்ச்சுனன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.